முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2019 சனவரி

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

(Business Law and Ethics)

2019 – 01 - 26
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடம்*
  *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***
  (3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரு மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*
  (5) ***வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு* ***வினைச் சொல்*** *உள்ளடங்கியிருக்கிறது (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்.*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 10

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### Question 01

*இல.* ***1.1*** *முதல்* ***1.7*** *வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை அவ்வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** 1978 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பு தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக:

**(a)** இது சனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுகிறது.

**(b)** இது சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கிடையிலான அதிகாரங்களின் வேறாக்கம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்கின்றது.

**(c)** இது பொலிஸ் ஆணைக்குழுவின் உருவாக்கத்தையும் அதன் அதிகாரங்கள் மற்றும் கடமைகளையும் பற்றிக் குறிப்பிடுகிறது.

மேலுள்ளவற்றுள் சரியான கூற்று / கூற்றுக்கள் :

(1) **(a)** மாத்திரம் (2) **(b)** மாத்திரம்

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேற்கூறப்பட்ட எல்லாம்.

**1.2** பின்வருவனவற்றுள் இலங்கையிலுள்ள விசேட சட்டமொன்றாக **அமையாதது** எது?

(1) கண்டியச் சட்டம் (2) முஸ்லிம் சட்டம்

(3) ஆங்கிலச் சட்டம் (4) தேசவழமைச் சட்டம்

**1.3** பின்வருவனவற்றுள் தனியார் சட்டத்திற்கான (Private Law) ஓர் உதாரணமாக **அமையாதது** எது?

(1) குடும்பச் சட்டம் (2) ஒப்பந்தச் சட்டம்

(3) நிருவாகச் சட்டம் (4) ஆதனச் சட்டம்

**1.4** பின்வருவனவற்றுள் கணக்காளர் ஒருவரால் எதிர்கொள்ளப்படுகின்ற பிரதான ஒழுக்க விழுமியங்கள் சார்ந்த பிரச்சினையாக (Ethical issue) அமைவது எது?

(1) முகாமையிடமிருந்தான அழுத்தம் (2) விழுமியம்சார் உணர்விலுள்ள குறைபாடு

(3) நிதிசார் பதிவுகளின் விடுபாடுகள் (4) மேற்கூறப்பட்ட எல்லாம்.

**1.5** பின்வருவனவற்றுள் கைமாற்றத்தகு சாதனமாக இருப்பது எது?

(1) கப்பலேற்று வார்நாமம் (2) நாணயக் கடிதம்

(3) மாற்றுண்டியல் (4) காசுக் கட்டளை

**1.6** பின்வருவனவற்றுள் செல்லுபடியான ஒப்பந்தமொன்றை அமைப்பதற்கான பிரதான தேவைப்பாடாக **அமையாதது** எது?

(1) பிரதிபயன் (Consideration) (2) ஒப்பந்தம் செய்வதற்கான தகைமை

(3) தரப்பினர் இடையிலான உடன்படிக்கை (4) ஒப்பந்தத்தினுள் நுழைவதற்கான இடம்

**1.7** CIF ஒப்பந்தம் தொடர்பான பின்வரும் வாசகங்களைக் கருதுக:

**(a)** ஒப்பந்தத்தில் விவரணப்படுத்தப்பட்டுள்ள பொருட்களை, கப்பலில் ஏற்றுவது விற்பனையாளரின் பொறுப்பாகும்.

**(b)** கொள்வனவாளருக்கு நன்மையளிக்கக்கூடிய காப்புறுதிக் கொள்ளையொன்றை விற்பனையாளர் ஒழுங்குசெய்தல் வேண்டும்.

**(c)** சகல இறக்குமதித் தீர்வைகளையும் கப்பல்துறை மேடைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் விற்பனையாளர் செலுத்துதல் வேண்டும்.

மேலுள்ள கூற்றுக்களுள் சரியான கூற்று / கூற்றுக்கள்:

(1) **(a)** மாத்திரம் (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்

(3) **(b)** மாத்திரம் (4) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்

*இல. **1.8** முதல் **1.10** வரையான வினாக்களுக்கான சுருக்க விடைகளை வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.8** முகவராண்மைச் சட்டத்தின் கீழ் முதல்வர் முகவர் உறவு உருவாகும் முறைகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**1.9** இலங்கையிலுள்ள ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**1.10** தொழில்சார் ஒழுக்க விழுமியங்களின் அடைப்படைக் கோட்பாடொன்றான ‘‘இரகசியத்தன்மை (confidentiality)’’ என்பதாற் கருதப்படுவது யாதென சுருக்கமாக விபரிக்குக.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

பொலநறுவையிலுள்ள **தயா டிரேடிங் கம்பனிக்கு** அனுப்புவதற்காக கொழும்பிலுள்ள களஞ்சியம் ஒன்றிலிருந்து அதிகளவான உருக்கு இருப்பினை (steel stock) பொலநறுவையிலுள்ள **தயா டிரேடிங் கம்பனியின்** ஒரு முகவரான **தயாபரன்** வாங்கியுள்ளார். பொலநறுவையில் ஏற்பட்ட பலத்த மழை மற்றும் வெள்ளம் காரணமாக, இருப்பினை பொலநறுவைக்கு அனுப்புவது **தயாபரனுக்கு** சாத்தியமானதாக இருக்கவில்லை. வெள்ளம் காரணமாக தொடர்பாடலும் செயலிழந்திருந்தது. அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வரி காரணமாக உருக்கின் விலை அதிகரித்திருந்தமை பற்றி அறிந்திராத **தயாபரன்** கொழும்பிலுள்ள கொள்வனவாளர் ஒருவருக்கு சகல உருக்கு இருப்புகளையும் விற்பனை செய்தார். அதன் பின்னர் உருக்கின் விற்பனையிலிருந்து கிடைத்த பணத்தை **தயா டிரேடிங் கம்பனிக்கு தயாபரன்** அனுப்பினார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**தயா டிரேடிங் கம்பனி, தயாபரனிடம்** ஏற்பட்ட இழப்பிற்கான உரிமைக்கோரிக்கையைச் (claim) செய்ய முடியுமா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 03

பிரசைகள் என்ற வகையில் அவர்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கென சமூகத்திற்கான சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் காணப்படுகின்றன. 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பண மோசடி தவிர்ப்புச் சட்டம் என்பன இலங்கையில் நடைமுறையிலிருக்கின்ற முக்கிய சட்டங்களாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின்கீழான குற்றங்கள் (offences) மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) பண மோசடி தவிர்ப்புச் சட்டத்தின்படி, சட்டமுறையற்ற (Unlawful) நடவடிக்கைகள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 04

1896 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டமானது பொருட்கள் விற்பனையை ஆளுகின்ற சட்டத்தினுள் உள்ளடங்குகின்றது. இது பொருட்கள் விற்பனை ஒப்பந்தங்களையும் அன்பளிப்புகள் மற்றும் இலவசமான மேம்படுத்தல் விருப்பறிவிப்புகள் (offers), வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகள், வேலை மற்றும் பொருட்களுக்கான ஒப்பந்தங்கள் போன்ற வேறு விநியோக ஒப்பந்தங்களையும் வேறுபடுத்துவதற்கு முக்கியமானதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ''பொருட்கள் விற்பனை ஒப்பந்தம்''என்பதை **வரைவிலக்கணப்படுத்துக.** (02 புள்ளிகள்)

(b) அன்பளிப்புகள் மற்றும் இலவசமான மேம்படுத்தல் விருப்பறிவிப்புகள் என்பன ஏன் பொருட்கள் விற்பனை ஒப்பந்தங்களாகக் கருதப்படுவதில்லை என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 05

**போல்** என்பவரால் **சாம்** என்பவருக்கு வழங்கப்பட்ட சேவை ஒன்றிற்காக காலையில் (morning) **போல்** இற்கு **சாம்** காசோலையொன்றை வழங்கியிருந்தார். ஆனால், பின்னேரமளவில் (evening) **போல்** இனால் ஆற்றப்பட்ட பணி ஏற்றுக்கொள்ளத்தக்க தரத்தில் இருக்கவில்லை என்பதை **சாம்** அறிந்துகொண்டார். எனவே, பின்னேரம், **போல்** இற்கான கொடுப்பனவை நிறுத்துவதற்காக, கொடுப்பனவுக்கு எதிரான ஆணை ஒன்றினை (கொடுப்பனவை நிறுத்தும் கட்டளை ஒன்றினை) **சாம்** வங்கிக்கு வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், கொடுப்பனவை நிறுத்தும் கட்டளையைக் கொண்ட கடிதமானது 2 நாட்கள் கழியும் வரை முகாமையாளருக்குக் கிடைத்திருக்கிவில்லை என்பதுடன் அந்தக் காலப் பகுதியினுள் **போலினால்** காசோலையானது காசாக மாற்றப்பட்டிருந்தது. **சாம்** காசோலைத் தொகையினை மீளப் பெறும் பொருட்டு வங்கிக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

வங்கியிடமிருந்து அத்தொகையினை மீளப் பெறுவதற்கு **சாம்** உரித்துடையவரா என்பதை **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 06

சர்வதேச வர்த்தகம் என்பது இரு நாடுகளுக்கிடையில் அல்லது இரு நாடுகளில் வதியும் நபர்களுக் கிடையில் இடம்பெறும் வர்த்தகமாகும். கொள்வனவாளரும் விற்பனையாளரும் வெவ்வேறு நாடுகளில் வதிவதுடன் பொருட்களானது ஒரு நாட்டிலிருந்து இன்னுமொரு நாட்டிற்குக் கொண்டுசெல்லப்படுகின்றன. நாணயக் கடிதங்கள், மாற்றுண்டியல், வசூலித்தல் உடன்படிக்கைகள், திறந்த கணக்குகளின் ஊடாகச் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு, முற்பணமாகச் செய்யப்படும் கொடுப்பனவு போன்ற பல்வேறு கொடுப்பனவு முறைகள் சர்வதேச வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நாணயக் கடித (Letter of Credit) முறை எவ்வாறு இயக்கப்படுகின்றது என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

(a) **நயனி** என்பவர் தர்ம ஸ்தாபனம் ஒன்றான **செத்சேவா பவுண்டேசன்** இல் ஒரு வருட காலப்பகுதிக்கு கணக்கு எழுதுநராகத் தற்காலிக நியமனமொன்றைப் பெற்றுள்ளார். அவரது நியமனக் கடிதத்தில் ஊழியர் சேமலாப நிதி உரித்து (EPF entitlement) பற்றிக் குறிப்பிடப்படவில்லை. எனவே, **நயனி** தனது ஒரு வருட வேலைக் காலப் பகுதிக்கு ஊழியர் சேமலாப நிதி உரித்துக் காணப்படுகிறதா என்பது பற்றி அறிய விரும்புகின்றார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேற்படி விடயம் தொடர்பில் ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளினது பொருத்தப்பாட்டுத் தன்மையினை (applicability) **ஆராய்க.** (05 புள்ளிகள்)

(b) **பேட்டி** என்பவர் நீண்ட காலமாக **ABC (தனி.) கம்பனிக்காக** வேலை செய்கிறார். அவர் ரூ. 10,000/- என்னும் மாதாந்தச் சம்பளத்திற்கு 2015 டிசெம்பர் 01 ஆந் திகதி முகாமைத்துவப் பயிற்சியாளராக அக்கம்பனியில் இணைந்துகொண்டார். தற்போது அவர் ரூ. 300,000/- மாதாந்தச் சம்பளத்துடன் அக்கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக (CEO) கடமையாற்றுகின்றார். அவர் 2019 சனவரி 31 ஆந் திகதி தொடக்கம் கம்பனியிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்திருக்கிறார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, **பேட்டி**யினுடைய பணிக்கொடை உரித்தினை **கணிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

**கமல், கீதா, ராஜா** ஆகியோர் சம அளவில் மூலதனத்தினை இட்டு விளம்பர முகவராண்மை ஒன்றினை முன்னெடுப்பதற்கான பங்குடமை வியாபாரமொன்றை ஆரம்பித்தனர். அவர்கள் மத்தியில் எவ்வித பங்குடமை உடன்படிக்கையும் காணப்படாததுடன் அவர்கள் 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தைப் பின்பற்றுவதற்கு இணங்கியிருந்தனர். **கீதா** வியாபாரத்தில் மிகத் துடிப்புடன் ஈடுபட்டதுடன் அவர் வாடிக்கையாளர்களுடனான சகல வியாபாரக் கூட்டங்களிலும் பங்குபற்றியிருந்தார். **கமல்,** வியாபாரத்தின் மூலதனத்திற்கு சமனான பங்களிப்பை வழங்கியிருந்த போதிலும், விளம்பர முகவராண்மையின் நாளாந்த நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்க விரும்பினார். மேலும், அவர் தனது மனைவியையும் ஒரு பங்காளராக இவ்வியாபாரத்தினுள் உள்ளிடுவதற்கு விரும்பியிருந்தார். எவ்வாறாயினும், இந்தத் தீர்மானத்திற்கு **கீதா** தனது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்ததுடன் அவர் பங்குடமையின் இலாபத்திலிருந்து மேலதிக பங்கொன்று தனக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் அறிவித்திருந்தார். மேலும், **ராஜா**வும்கூட வியாபார முகாமைக்கான தனது பங்களிப்புக்காக சம்பளம் ஒன்று தனக்கு வழங்கப்படவேண்டும் என்னும் கண்ணோட்டத்தில் இருக்கிறார். மேலும், **ராஜாவும் கமலும்** வியாபாரத்தின் தன்மையை மாற்றுவதற்கு விரும்புவதுடன் **கீதா** இதற்கும்கூட தனது திடமான எதிர்ப்பினை வெளிக்காட்டியுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

முறையே **கமல் கீதா, ராஜா** ஆகியோரின் உரிமைகளையும் கடமைகளையும் **ஆராய்க.** (10 புள்ளிகள்)

## வினா 09

தனியுடமை வியாபாரியான **மதுர** என்பவர் தனது தனியுடமை வியாபாரத்தை தான் பங்குதாரராகவுள்ள **XYZ (தனி.) கம்பனிக்கு** விற்பனை செய்துள்ளார். வியாபாரத்தை விற்பனைசெய்த நேரத்தில், **மதுர**வின் பெயரில் காப்புறுதி செய்யப்பட்டிருந்த தனியுடமை வியாபாரத்தின் சகல ஆதனங்களையும் **XYZ (தனி.) கம்பனிக்கு** மாற்றியிருந்தார். அந்த ஆதனங்கள் மாற்றப்பட்டதன் பின்னர், ஆதனங்களில் ஒன்று தீ விபத்து காரணமாக அழிவடைந்தது. மூல (originally) காப்புறுதி தனது பெயரில் பெறப்பட்டிருந்த காரணத்தால் காப்புறுதிக் கம்பனியிடம் **மதுர,** இச்சேதத்திற்கான உரிமைக்கோரிக்கையைச் (claimed) செய்திருந்தார். எவ்வாறாயினும், காப்புறுதிக் கம்பனி **மதுர**வின் நட்டஈட்டுக் கோரிக்கையை நிராகரித்திருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) காப்புறுதிக் கம்பனி **மதுர**வின் கோரிக்கையை நிராகரிக்க முடியுமா என்பதை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(b) "இழப்பீடு (indemnity)" என்னும் காப்புறுதி எண்ணக்கருவை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

## பகுதி D

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 10

(a) தனது நண்பன் **றொமேஷ்** தன்னுடைய காரினை விற்பதற்கு முயற்சித்த விடயம் **பிரியா**வுக்குத் தெரியவந்தது. **பிரியா** அக்காரை வாங்குவதற்காக மின்னஞ்சல் மூலம் விருப்பறிவிப்புச் (offered) செய்திருந்ததுடன் அதில் ''உன்னிடமிருந்து பதில் எதுவும் வரவில்லையெனின், காரானது ரூ.2 மில்லியனுக்கு எனக்குச் சொந்தமானது என நான் கருதுகின்றேன்'' எனக் குறிப்பிட்டிருந்தார். விருப்பறிவிப்பை ஏற்றுக் கொள்வதற்கு **றொமேஷ்** விரும்பியிருந்தபோதிலும், தனது ஏற்பனவு பற்றி **பிரியாவுக்கு** அறிவித்திருக்கவில்லை. அதன் பின்னர், **றொமேஷ்** ரூ. 2.5 மில்லியனுக்கு தனது காரினை **ஆன்** என்பவருக்கு விற்பனை செய்தார்.

**பிரியா, போலுடன்** தனது திருமணத்தைத் திட்டமிட்டிருந்ததுடன் தனது திருமணத்திற்காக கட்டளை ஒன்றைச் செய்வதற்கென **''மல் மல் மலர்ச்சாலைக்குச்''** சென்றிருந்தார். அவர் தெரிவுசெய்த கருப்பொருளுக்கு இணங்க இயற்கையான சிவப்பு மற்றும் வெள்ளை றோஜாப் பூக்களுடன் சகல பூ அலங்காரங்களையும் ஒழுங்குமைப்பதற்கு மலர்ச்சாலை இணங்கியது. **பிரியா** இதற்கான முழுத் தொகையில் 75% இனை முற்பணமாகச் செலுத்தியதுடன் திருமண நாளன்று மீதித் தொகையைச் செலுத்துவதற்கும் இணங்கியிருந்தார். திருமணத் திகதிக்கு முதல் நாள், நாடு பூராகவும் கனத்த மழை பெய்ததுடன் பாரிய வெள்ளம் காரணமாக பாதைகளும் தடைப்பட்டிருந்தன. இதனால் போதுமானளவுக்கு இயற்கையான சிவப்பு மற்றும் வெள்ளை றோஜாப் பூக்களை **''மல் மல் மலர்ச்சாலையால்''** வழங்க முடியாதிருந்ததுடன் அதற்குப் பதிலாக **பிரியா – போல்** திருமணத்திற்கான பூ அலங்காரத்தில் இயற்கையான பூக்களுடன் சேர்த்து தங்களது குளிர்ச்சியான களஞ்சிய அறைகளில் வைக்கப்பட்டிருந்த சில செயற்கையான வெள்ளை றோஜாப் பூக்களையும் அவர்கள் பயன்படுத்தியிருந்தனர். மலர்ச்சாலை செய்த தவறை அறிந்துகொண்ட **பிரியா** மீதித் தொகையினைச் செலுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார்.

**றொமேஷ்** மற்றும் **மல் மல் மலர்ச்சாலை**யிடமிருந்து சேதத்திற்காக உரிமைக்கோரிக்கையை (claim) செய்வதற்கு **பிரியா** விரும்புகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றை **ஆராய்க**:

(i) **பிரியாவுக்கும் றொமேஷி**ற்குமிடையில் செல்லுபடியான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா? (06 புள்ளிகள்)

(ii) **றொமேஷ்** மற்றும் **மல் மல் மலர்ச்சாலை** தொடர்பாக **பிரியாவுக்கு** இருக்கின்ற சட்ட உரிமைகள் (09 புள்ளிகள்)

(b) **தீனா** என்பவர் ''ஸ்கின் அன்ட் ஹெயா கெயார்'' சலூனிடமிருந்து ''முகக் கிறீம்'' ஒன்றினை வாங்கினார். ஒரு சில நிமிடங்களின் பின்னர், அவர் அந்தக் கிறீமை தனது முகத்தில் பூசிய பின் அவர் சரும உபாதைக்கு (skin rash) ஆளானார். அவர் வைத்தியசாலைக்குச் கொண்டுசெல்லப் பட்டதுடன், அவரைப் பரிசோதித்த மருத்துவர், முகக் கிறீமில் இருந்த பொருள் ஒன்று காரணமாக இச்சரும உபாதை ஏற்பட்டுள்ளதாகக் கூறியிருந்தார். **தீனா** 5 நாட்கள் வைத்தியசாலையில் தங்கியிருக்க வேண்டியேற்பட்டதால் அவரால் வேலைக்கு அறிக்கையிட முடியவில்லை.

**தீனாவின்** சகோதரர் **சுராஜ், பியூட்டிபுல் ஹோம்ஸ் (பிரை.) லிமிட்.** இடமிருந்து தேக்குமரத்தாலான சாப்பாட்டு மேசையொன்றை ஓடர் செய்திருந்தார். அதனை அவர்கள் 2 வாரத்தினுள் கையளிப்பதாக **சுராஜ்** இற்கு வாக்களித்திருந்தனர். **சுராஜ்** குறிப்பிட்டதொரு வடிவமைப்பு பற்றி முகாமையாளரிடம் விசேடமாக அறிவுறுத்தியிருந்தார். **பியூட்டிபுல் ஹோம்ஸ் (பிரை.) லிமிட்.** அவர்கள் இணங்கியவாறு உரிய நேரத்தினுள் சாப்பாட்டு மேசையைக் கையளித்திருந்தனராயினும், அது தேக்கு மரத்தால் செய்யப்பட்டிருக்காததோடு, அவர் கேட்டிருந்த குறிப்பிட்ட வடிவமைப்புக்கு ஏற்பவும் காணப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பொருட்கள் விற்பனைக் கட்டளைச்சட்டத்தின்கீழ், பின்வருவனவற்றை **ஆராய்க**:

(i) **தீனாவுக்கு** கிடைக்கக்கூடிய சட்ட உரிமைகளும் பரிகாரங்களும் (தீர்வுகளும்) (05 புள்ளிகள்)

(ii) **சுராஜ்** இற்கு கிடைக்கக்கூடிய சட்ட உரிமைகளும் பரிகாரங்களும் (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |